அதற்கான முழுத் தொகையையும் அரசே ஏற்கும் என்றும் அறிவித்தார்கள்.

இந்தத் துயரச் சம்பவம் நடைபெற்றதற்கான காரணம் குறித்தும், இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. ஆர். ரெகுபதி அவர்கள் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தினை 3–7–2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அமைத்து உத்தரவிட்டார்கள்.

இக்கோர விபத்து குறித்து புலன்விசாரணை மேற்கொள்ள சென்னை மாநகர காவல் ஆணையரின் ஒட்டுமொத்த மேற்பார்வையில் காவல் இணை ஆணையர் தலைமையில் ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இக்கொடிய சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும், படுகாயமுற்று தவிப்போருக்கு ஆறுதலையும், காயமுற்றவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்ற விழைவையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது".

(இ) திருவள்ளூர் மாவட்டம், அலமாதி கிராமத்தில் சேமிப்புக் கிடங்கின் மதில் சுவர் இடிந்து விழுந்ததில் ஏற்பட்ட உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவள்ளூர் மாவட்டம், அலமாதி கிராமத்தில் சேமிப்புக் கிடங்கின் மதில் சுவர் இடிந்து விழுந்த விபத்தில் ஏற்பட்ட மனித உயிர்கள் இழப்பு குறித்த இரங்கல் தீர்மானத்தை இப்பேரவைமுன் வைக்கிறேன்.

"திருவள்ளூர் மாவட்டம், அலமாதி கிராமத்தில் உள்ள சேமிப்புக் கிடங்கின் மதில் சுவர் 6–7–2014 அன்று இடிந்து விழுந்த விபத்தில் கட்டடத் தொழிலாளர்கள் 11 பேர் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவ்விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பத்திற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கவும், இறந்தவர்களின் உடல்களை அவரவர் சொந்த ஊருக்கு அரசு செலவில் கொண்டு செல்லவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இக்கொடிய சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும்வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்".

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும்வகையில், பேரவையின் நிகழ்ச்சிகள் 30 நிமிடங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் முற்பகல் 10-40 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 10-40

முற்பகல் 10-40 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 95, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

96—

புறவழிச் சாலை

***1557—திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—